**பிப்ரவரி 13 - உலக வானொலி தினம்**

- **2019 தீம்: உரையாடல், சகிப்புத்தன்மை மற்றும் அமைதி**

- இமாச்சல பிரதேசத்தில், காங்க்ரா மாவட்டத்தில் 3.5 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது.
- பசந்த் பஞ்சமி திருவிழா பக்தியுடன் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மேற்கு வங்கம் சரஸ்வதி பூஜை திருவிழாவை பாரம்பரிய முறைப்படி கொண்டாடுகிறது.
- ஆப்கானிய அரசு தனது தேர்தல் ஆணையத்தை பணிநீக்கம் செய்துள்ளது.
- ஐநா பாதுகாப்பு சபையின் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் கிழக்கு உக்ரேய்னிற்கு உதவ கோரிக்கை.
- ஆஸ்திரேலியா அரசு அகதிகளுக்கு மருத்துவ உதவி வழங்கும் மசோதா நிறைவேற்றம்.
- எகிப்தின் பாராளுமன்றம் ஜனாதிபதியின் காலவரையறையை நீட்டிக்க வாக்களிக்க திட்டம்.
- பல்வேறு விதிமுறைகளை மீறியதற்காக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அபராதம்.
- மூன்றாவது இந்திய-ஜெர்மன் சுற்றுச்சூழல் கருத்துக்களம் "**தூய்மையான காற்று, பசுமை பொருளாதாரம்:**" புது டெல்லியில் நடைபெற்று வருகிறது.
- புதுதில்லியில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த ஊடக பிரிவுகளுக்கான முதல் வருடாந்திர மாநாடு நடைபெற்றது.
- புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் கைத்தறி மற்றும் கைவினைத் தொழிலில் சிறப்பாக பணிபுரிந்த 12 நெசவாளர்களும் கைவினைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
- உலக அரசு உச்சி மாநாடு WGS 2019 துபாயில் நடைபெற்றது.
- புதுதில்லி தல்கடோரா அரங்கில் நடைபெற்ற 2019-கிரேடாய் இளைஞர் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.
- ஜாலியன்வாலாபாக் தேசிய நினைவுச்சின்ன (சட்ட திருத்த) மசோதா, 2018 லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டது.
- பாராளுமன்ற எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் லோக்சபாவில் கட்டுப்பாடற்ற சேமிப்பு திட்ட மசோதா 2018 நிறைவேற்றப்பட்டது.
- பாராளுமன்றம் தனிநபர் சட்டங்கள் (சட்டதிருத்தம்)மசோதாவை நிறைவேற்றியுள்ளது. லோக்சபாவின் கடைசி அவையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.
- புது டில்லியில் ஆயுர்வேதம், சித்தா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு ஆன்லைனில் அங்கீகாரம் வழங்குவதற்கான இ-ஔஷாதி[AUSHADHI] போர்ட்டலை, ஆயுஷ் அமைச்சர் துவக்கி வைத்தார்.

- கால்பந்து போட்டியில், இந்திய மகளிர் அணி கோல்ட் கோப்பை சர்வதேச போட்டியின் இறுதி சுற்று ராபின் விளையாட்டில் மியான்மரை எதிர்கொள்கிறது.

Join Us on FB:

For English – Examsdaily For Tamil – Examsdaily Tamil

For WhatsAPP Group - Click Here